# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 1.00 மணித்தியாலங்கள் | தமிழ்மொழியும் இலக்கியமும் - I | பாட எண் : 22 T I |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ................................................................ | | |

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

❖ **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "கோதிலான் இந்தமொழி கூறுதலும்" இங்கு **கோது** என்பது.
   1. வீரம் 2. பகைமை 3. உறவு 4. குற்றம்

2. "கன்னல்மொழி கேளாது கஞ்சமுக நோக்காது" இங்கு **கன்னல்** என்பது.
   1. குயில் 2. கிளி 3. கரும்பு 4. தேன்

3. "வறியோருக்கும் ஆதரவற்றோருக்கும் உணவளிக்கும் இடம் ஆதுலர்சாலை" **ஆதரவு** என்பதன் **எதிர்க்கருத்துச்** சொல்,
   1. தனிமை 2. பகைமை 3. அநாதரவு 4. ஒவ்வாமை

4. "அரசாங்கத்தால் விதவைகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது" இங்கு **விதவை** என்பதன் **எதிர்ப்பாற்** சொல்.
   1. அநாதை 2. வித்துவான் 3. தபுதாரன் 4. ஆடவன்

5. "கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் " இங்கு **கேண்மை** என்பதன் **எதிர்ப்பதம்,**
   1. தண்மை 2. வாய்மை 3. பகைமை 4. நன்மை

❖ **பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6. Solid (சொலிட்) என்பதன் தமிழ்ச் சொல்லாக அமைவது.
   1. நிச்சயம் 2. தனிமை 3. திண்மம் 4. திரவம்

7. புராணக் கதைகளைச் சுவைபடப் பிரசங்கம் செய்வோன்.
   1. துறவி 2. குரு 3. பௌராணிகன் 4. ஞானி

8. நஞ்சு, மழைநீர், ஆலமரம், அம்புக்கூடு என்னும் பலபொருள் தரும் ஒரு சொல்,
   1. காலம் 2. சாலம் 3. ஆலம் 4. ஞாலம்

9. தென்னையின் இளங்காய். குரும்பை என்பது போல வாழையின் இளங்காய்,
   1. வடு 2. கச்சல் 3. பிஞ்சு 4. மூசு

10. பின்வரும் சொற்களில் 'க'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.
    1. சுகம் 2. மேகம் 3. தேகம் 4. கப்பல்



kalvi.lk

11. பாதுகாத்துத் தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைப்பது,
1. அடைக்கலம் 2. ஓம்படை 3. சரணாகதி 4. காவல்

12. "என்ன இப்பிடிச் சொல்லிப்போட்டியள்?" என்பது எப்பிரதேசக் கிளைமொழி?
1. கிழக்கு 2. வடக்கு 3. மலையகம் 3. மேற்கு

13. வீண்செலவு செய்பவன்,
1. உதவாக்கரை 2. கருமி 3. ஊதாரி 4. பேதை

14. இளமைக்குரிய பிள்ளை எனும் மரபுப் பெயரைக் கொண்டிருக்காத சொல்
1. கீரி 2. தென்னை 3. அணில் 4. ஆடு

15. மாதம், நாள், சந்திரன் எனும் பலபொருள் தரும் சொல்.
1. செவ்வாய் 2. ஞாயிறு 3. திங்கள் 4. நிலா

16. எதிர்பாராத துன்பம் மீனவக் கிளைமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?
1. வெள்ளிடி 2. மண்டா 3. அம்மாறு 4. அத்தாங்கு

17. கோப்பை என்பது எம்மொழிச்சொல்?
1. அரபு 2. ஒல்லாந்து 3. மராட்டி 4. போர்த்துக்கீசு

18. பறவை மலம் எச்சம் என்பது போல, கழுதை மலம்
1. இலண்டம் 2. இலத்தி 3. விட்டை 4. சாணம்

19. "உனக்கு வரவர நாக்கு நீளுகின்றது" என்று அம்மா ஏசினார். **நாக்கு நீளுதல்** என்ற மரபுத்தொடரின் பொருள்.
1. நாக்கு நீளமாதல் 2. மனிதன் வளர்ச்சியடைதல்
3. எதிர்த்துப் பேசுதல் 4. அடக்கமின்றிப் பேசுதல்

20. முயற்சியே வெற்றிதரும் என்பதை **உணர்த்தாத** பழமொழி,
1. அலைமோதும் போதே தலைமுழுகு
2. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
3. எறும்பூரக் கற்குழியும்.
4. அழுதபிள்ளை பால்குடிக்கும்.

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. மாத்திரை அதிகமாக உள்ள சார்பெழுத்தாக அமைவது,
1. உயிர்நெடில் 2. ஒற்றளபெடை 3. உயிர்மெய்நெடில் 4. உயிரளபெடை

22. பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்பட்ட சொல்லாக அமைவது,
1. பொன்னன் 2. நடந்தனன் 3. கண்டான் 4. உண்டனன்

23. பின்வருவனவற்றுள் இடைத்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது,
1. கிணறு 2. நெல்லு 3. சால்பு 4. வாழ்வு

24. "தந்தை மகனை அன்போடு பார்த்தார்." இதில் ஓடு எனும் உருபு உணர்த்தும் பொருள்,
1. அடைமொழி 2. உடனிகழ்ச்சி 3. கருவி 4. அடைதல்

25. "பாண்டவருள் தருமனே பொறுமை மிக்கவன்" இதில் ஏகாரம் உணர்த்தும் பொருள்,
1. தெரிநிலை 2. தேற்றம் 3. பிரிநிலை 4. ஐயம்

26. "புலர்ந்தது பொழுது" என்பது எவ்வகைத் தொடராகும்?
1. எழுவாய்த் தொடர் 2. வினைமுற்றுத்தொடர்
3. பெயர்த்தொடர் 4. பெயரெச்சத்தொடர்


kalvi.lk

27. பொருளால் வேறுபடும் இணைப்பிடைச்சொல்,
1. இருந்தாலும் 2. ஏனெனில் 3. ஆயினும் 4. இருப்பினும்

28. பாய்ந்துவந்த கருங்குரங்கு மரமேறியது. இதில் இடம்பெற்றுள்ள தொகைகள் முறையே,
1. உம்மைத்தொகை, பண்புத்தொகை 2. உவமைத்தொகை, வினைத்தொகை
3. பண்புத்தொகை, வேற்றுமைத் தொகை 4. பண்புத்தொகை, வினைத்தொகை

29. தோன்றல் புணர்ச்சியாக **அமையாதது**
1. நாளெல்லாம் 2. மண்ணணை 3. கல்லெறிந்தான் 4. பண்ணிசை

30. “முகிலினங்கள் அலைகிறதே முகவரிகள் தொலைந்தனவோ...” இதிலிடம்பெற்ற அணி,
1. உவமை 2. உருவகம்
3. தற்குறிப்பேற்றம் 4. உயர்வுநவிற்சி

❖ **பொருத்தமான விடையைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

31. நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் உணர்த்துவனவாய் அமையும் தொல்பொருட்கள் ....................................... காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
1. சுவடிகள் கூடத்தில் 2. களஞ்சியசாலையில்
3. நூதனசாலையில் 4. திறைசேரியில்

32. மத்தியவங்கியின் தலைவர் .................................................. ஆவார்.
1. ஆணையாளர் 2. ஆளுநர் 3. முகாமையாளர் 4. பணிப்பாளர்

33. விபத்தில் ஏற்படக்கூடிய இழப்பை நிவர்த்திப்பதற்கு தனிநபரோ, நிறுவனமோ முற்கூட்டியே செய்வது ............................................. ஆகும்.
1. சேமிப்பு 2. முதலீடு 3. மானியம் 4. காப்புறுதி

34. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு நீதிபதி குறித்தநாளில் நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கும்படி ............................................................. விடுத்தார்.
1. அழைப்பாணை 2. பிடியாணை
3. கோரிக்கை 4. ஆட்கொணர்வுமனு

35. கடும் மழைபொழிந்ததால் குளங்கள் .........................................................................
1. எல்லாம் நிறைந்தது. 2. ஒவ்வொன்றும் நிறைந்தது.
3. எல்லாம் நிறைந்தன. 4. ஒவ்வொன்றாக நிறைந்தன.

❖ **36 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்குப் பின்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**

சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ?
வட்டக்கரிய விழி கண்ணம்மா வானக் கருமைகொல்லோ?
பட்டுக் கருநீலப் புடவையில் பதித்த நல்வைரம்
நட்டநடுநிசியில் தெரியும் நட்சத்திரங்களடி

36. இப் பாடலில் கவிஞர் கூறியிருப்பது,
1. தலைவியின் அழகு 2. இயற்கையின் அழகு
3. வானின் அழகு 4. நட்சத்திரங்களின் அழகு

37. இப் பாடலில் இடம்பெற்றுள்ள அடுக்கிடுக்குத்தொடர்,
1. விழிச்சுடர் 2. கருநீலம் 3. நட்டநடு 4. நல்வைரம்

38. சூரிய சந்திரர் என்பது,
1. உவமைத்தொகை 2. உம்மைத்தொகை 3. பண்புத்தொகை 4. வினைத்தொகை


kalvi.lk

39. பாடலில் கையாளப்பட்டுள்ள அணி,
1. உவமை 2. உருவகம் 3. சிலேடை 4. உயர்வுநவிற்சி

❖ **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி கட்டுக் கோப்பான பந்தியொன்றை அமைப்பதற்குரிய வைப்புமுறையைத் தெரிவு செய்க.**

40. அ. மாற்றமுறும் உலகின் சவால்களை எதிர்கொள்ள, கல்வியே சிறந்த ஆயுதம்.
ஆ. ஆகவே, ஏனைய விடங்களுக்கு மேலாக அதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
இ. இனிவரும் காலங்களிலும் கல்வியாலேயே உலகை மாற்றுதல் முடியும்.
ஈ. சாதனைகளைப் படைத்த பலர் இதற்கான சான்றாக உள்ளனர்.
உ. இந்த ஆயுதத்தினால் சாதிக்க முடியாதவை என்று எவையுமில்லை.

1. இ, ஈ, அ, உ, ஆ
2. அ, உ, ஈ, இ, ஆ
3. அ, உ, ,, ஈ, ஆ
4. உ, ஈ, ஆ, அ, இ


kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 2.00 மணித்தியாலங்கள் | தமிழ்மொழியும் இலக்கியமும் - II | பாட எண் : 22 T II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................. | | |

**01) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
“வானுலகினின்பமெல்லாம்”

2. பின்வரும் வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
“பல்லாயிரம் பேரால் அந்த மாளிகை அமைக்கப்பட்டது”

3. கீழே தரப்படும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை இனங்கண்டு எழுதுக.
“யார் இல்லையென்று சொன்னாலும் மாதவனே சிறந்த மாணவன்”

4. “கன்றினது உடல் நக்கிக் களைக்கின்ற பசுக்கள்” இதில் இடம்பெற்றுள்ள வழுயாது? சுருக்கமாக விளக்குக.

5. “தாயின் துன்பத்தைப் போக்குவதற்காக மாலினி வேலைசெய்துகொண்டே கற்றாள்” இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள சொல்லுருபு யாது? அதன் பொருளைக் குறிப்பிடுக.

6. பேச்சுவழக்கிலுள்ள பின்வரும் தொடரை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
“இந்த நேரத்தில எங்க போட்டு வாறாய்?”

7. “அழகிய நிர்மலமான வானத்தில் தங்கத்தட்டாக பருதி மெதுமெதுவாக மெல்ல எழுந்தது”
இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற ஆக்கப் பெயரடையையும் ஆக்க வினையடையையும் இனங்கண்டு எழுதுக.

8. “களித்து ரசித்திட்ட காட்சிகள் தொலைந்திட வந்து சேர்ந்தது மாபெரும் யுத்தமே” என்ற வரியில் இடம்பெற்றுள்ள ஏதாவது இரண்டு குற்றியலுகரச் சொற்களை இனங்கண்டு எழுதி அவை எவ்வகைக் குற்றியலுகரங்கள் எனக் குறிப்பிடுக.

9. “கல்வி அமைச்சினால் ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய பரீட்சையில் சித்திபெறத் தவறிய மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டது.” இவ்வாக்கியத்தினைப் பொருள் மயக்கமற்ற வகையில் திருத்தி எழுதுக.

10. “அசாதாரண சூழ்நிலைகளால் விடுமுறைகள் அதிகரித்தாலும் பரீட்சைகள் உரிய காலத்தில் நடாத்தப்படும் என, பரீட்சைத் திணைக்களம் அறிவித்தது.” இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் குறிப்பிடுக.

(2X10 = 20 புள்ளிகள்)



kalvi.lk

**02) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

I. அதிகரித்துவரும் மக்கள் தொகையின் பல்வேறு தேவைகளுக்காக இயற்கை வளங்களில் ஒன்றான காடு அழிக்கப்படுகின்றது. இதனால் காடுகளைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களும் காட்டு விலங்குகளும் இன்னும் எல்லா உயிரினங்களும் துன்பங்களையே அனுபவிக்க நேரிடும் என்பதை வலியுறுத்தும் ஒரு விளக்கக்கட்டுரை.

II. வீதிவிபத்துகள் நாள்தோறும் அதிகரித்து வரும் நிலையில் இது பற்றி ஆராய்ந்ததில் வீதிப்பாவனை மற்றும் போக்குவரத்து விதிகள் மீறப்படுகின்றமையே இவற்றுக்கான அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வீதி ஒழுங்குகளைச் சரியாகப் பேணுவோர் கூட இச்சந்தர்ப்பங்களில் துன்பங்களுக்குள்ளாகின்றனர். எனவே, வீதி ஒழுங்குகளைச் சரியாகக் கடைப்பிடித்து வீதிப்பாவனையை மேற்கொள்வதன் மூலம் வீதிவிபத்துக்களைக் குறைத்தல் பற்றி மாணவர் மன்றக் கூட்டமொன்றில் நிகழ்த்தும் மேடைப்பேச்சு.

III. பழங்காலத்தில் இருந்த வாழ்க்கைமுறை நவீன வாழ்வியல் போக்குகளால் மாற்றமடைந்து வந்துள்ளது. இதனால் நன்மைகளோடு தீமைகளும் பெருகியுள்ளன. குடும்ப வாழ்வியல் முறைமையானது முன்னர் இருந்தது போல, இப்போது இல்லையென்று கூறக்கூடிய அளவில் மாற்றங்கள் பல்கிப் பெருகியுள்ளன. பாரம்பரிய வாழ்க்கைமுறை சிறந்தது என்று கருதும் ஒருவருக்கும் தற்கால வாழ்க்கைமுறை சிறந்தது எனக்கருதும் இன்னொருவருக்குமிடையிலான உரையாடல்.

IV. தர்சினி முன்னேறத்துடிக்கும் ஆர்வமிக்க ஒரு மாணவி. பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் அவளே முன்னிற்பாள். அவளில்லாத நிகழ்வுகளே இல்லையென்று கூறலாம். ஆசிரியர்கள் அத்தனை பேரின் மனங்களையும் வென்ற அவளால் அவளது வகுப்பில் கற்கும் திவ்யாவின் அன்பை மட்டும் பெறமுடியவில்லை. திவ்யாவுக்கு தர்சினியைக் கண்டாலே பிடிக்கவில்லை. ஆனால் தர்சினியோ திவ்யாவை மிக அதிகமாக நேசித்தாள். திடீரென ஒருநாள் விபத்தில் திவ்யாவின் தாய் இறந்து விட்டார். இச்சம்பவத்தைக் கருவாகக் கொண்ட சிறுகதை.

(25 புள்ளிகள்)

**03) கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 50 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.**

அவரவர் கொள்கைக்கும் மனப்பக்குவத்திற்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு விதவிதமான இணக்கங்கள் கொள்கின்றனர். தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனுக்கு உலகில் உள்ள நலமும் கேடும் தென்படுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலே அவன் எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான். அத்தகையவன் மக்களுள் கடைத்தரமானவன். அவன் விலங்குகளுக்கு ஒப்பானவன். இனி தரத்திலே அவனை விட மேலானவன் ஒருவன் இருக்கின்றான். உலகில் பல கேடுகள் இருக்கின்றன என்னும் உண்மையை அவன் தாபித்துக் கொள்வதற்கு உலகை அவன் துறந்து விடுகின்றான். தனியாய் இருந்து கொண்டு தனக்குத் தோன்றுகின்ற அமைதியான நல்வாழ்வை வாழ அவன் முயல்கின்றான். அத்தகையவனைத் துறவி என்று அழைப்பது உலக வழக்கு. ஆனால் துறவிகளுள் அவன் கடையனாகின்றான். ஏனென்றால், கேட்டுக்கு அஞ்சி உலகின்று விலகியவன் ஆகின்றான். இவனிலும் மிக்கானாக மற்றொருவன் இருக்கின்றான். அவனைச் சமூகம் சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும்.

சமூகத்திலுள்ள சீர்கேடுகளையெல்லாம் அவன் தெளிவுபட அறிந்து கொள்கின்றான். அவைகளை விலக்குவது தன் கடமையென்று அவன் உணர்கின்றான். கேடுகளைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துப் புகட்டுகின்றான். கேடுகளை அகற்றுவதற்கு வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சமூக சீர்திருத்தங்களை அவன் செய்ய ஆரம்பிக்கின்றான். தன்னையும் மறந்து மற்றவர்களுடைய நலத்திலே அவன் ஈடுபட்டு இருப்பதால் அவனுடைய எண்ணத்தையும் செயலையும் சிறப்பித்துக்கூற நாம் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

(10 புள்ளிகள்)

**04) பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இலக்கியம் என்பது படைப்புக்கலை. மனித இனத்தின் வாழ்வியல் அனுபவங்களைக் கலைநயத்தோடு எடுத்துரைக்கும் இலக்கியம் வரலாற்றின் இயங்கு கருவியாகவும் காலத்தின் கண்ணாடியாகவும் அமைகின்றது. இலக்கியம் எனும் சொல் வடமொழிச் சொல்லின் திரிபாகும். இது நோக்கம், குறிக்கோள் முதலான பலபொருள்களை உடையது. இதனாலேயே இலக்கு+இயம் இலக்கியம் எனக்கொண்டு நோக்கினை இயம்புவது இலக்கியமெனக்கூறிப் பொருள் உரைப்பர். ஞா. தேவநேயப்



kalvi.lk

பாவாணர். சிறந்த வாழ்க்கைக் குறிக்கோளான அறத்தை எடுத்துக் காட்டுவது இலக்கியம் என்றும் சிறந்த மொழிக் குறிக்கோளான அமைப்பை எடுத்துக் கூறுவது இலக்கணம் எனவும் குறிப்பிடுவார். இலக்கணத்திற்கு அணங்கம் என்றும் இலக்கியத்திற்கு அணங்கியம் என்றும் பெயர்களுண்டு. இந்த வரையறையின் கீழ் இலக்கியத்தை இன்பியல் இலக்கியம், அறிவியல் இலக்கியம் என இருவகைகளாகப் பிரிக்கலாம். இன்பியல் இலக்கியம் "கற்போர் உள்ளத்திற்கு இன்பம் தரும் நூல்கள்" அறிவியல் இலக்கியம் "கற்போருக்கு அறிவை முதன்மையாகத் தரும் நூல்கள்" தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை இன்பியல் இலக்கியங்களே. இந்த இலக்கிய வளர்ச்சி அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றிவந்ததால் ஏற்பட்டிருக்கலாம். அதன் விளைவாக இலக்கியம் என்றசொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் ஆகிய எழுத்துக்கலை வடிவங்களே தற்போது தமிழிலக்கியம் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றன.

1. இலக்கியம் என்ற சொல் குறிக்கும் பொருள்கள் எவை?
2. இலக்கணம் என்ற சொல்லுக்கு ஞா. தேவநேயப்பாவாணர் குறிப்பிடும் விளக்கம் யாது?
3. "தமிழ்மொழியில் இன்பியல் இலக்கியங்களே அதிகளவில் உள்ளன" என்பதற்கு கட்டுரையாசிரியர் கூறும் காரணம் யாது?
4. தற்காலத் தமிழ் இலக்கியங்கள் எனக் கருதப்படுபவை யாவை?
5. இன்பியல் இலக்கியம், அறிவியல் இலக்கியம் என உரைநடைப்பகுதியில் கூறப்படுபவை எவை?

(2X5 = 10 புள்ளிகள்)

**05)** நாட்டில் அதிகரித்து வரும் போதைப்பொருட் பாவனையானது வளர்ந்தோர் மற்றும் இளைஞர்களை மட்டுமல்லாது சிறுவர்களையும் பாதிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, போதைப்பொருள் பாவனையின் தீமைகளைத் தெளிவுபடுத்தி, சுகாதாரத் திணைக்களத்தினரால் வெளியிடப்படும் ஒரு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரத்தை 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

**அல்லது**

2023 ஆம் ஆண்டில் நடைபெற்று முடிந்த உமது பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பற்றிய அறிக்கையினை, பாடசாலையின் விளையாட்டுத்துறைத் தலைவர் என்ற வகையில் 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

(15 புள்ளிகள்)

LMDUnit Education කල්වි අධ්‍යාපන



kalvi.lk

kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 2.00 மணித்தியாலங்கள் | தமிழ்மொழியும் இலக்கியமும் - III | பாட எண் : 22 T III |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ........................................................ | | |

**கவனிக்க:**
- அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
- 1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

**01. சுருக்கமான விடை தருக.**

i. “தெண்ணீர்க் கயத்துட் சிறுமின் சினையினும் நுண்ணிது..”
அ இவ்வரிகளால் புலவர் கூறமுற்பட்டது யாது?
ஆ. இங்கு “சினை” எனக் குறிப்பிடப்படுவது யாது?

ii. “விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவையில் முறையிடுநாள் வெகுளேல் என்று”
அ. விரிகுழல் பைந்தொடி எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?
ஆ. வெகுளேல் என்று கூறியவன் யார்?

iii. “புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து நின்ற விருப்புடன்.”
அ. கரணங்கள் எவை?
ஆ. புலன்கள் ஐந்தையும் குறிப்பிடுக.

iv. “இந்த சினிமா மொழிக்கும் இலக்கணம் மரபு எல்லாமே உண்டு”
அ. சினிமா மொழியுள் அடங்குபவை எவை?
ஆ. அழியாத கோலங்கள் என்ற திரைப்படத்தின் இயக்குநர் யார்?

v. “உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான் அறத்தின் உருவம் போல்வான்”
அ. “உயிர் அனையாய்” என விளிக்கப்படுபவர் யார்?
ஆ. “அறத்தின் உருவம் போல்வான்” யார்?

vi. “கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலோ மென்றான்”
அ. இங்கு கட்டுரை என்பது எதனைக் குறிக்கின்றது?
ஆ. இக்கூற்று இடம்பெறும் நூலின் ஆசிரியர் யார்?

vii. “கூட்டில் பசுங்கிளிபோல் கோதையரை எப்பொழுதும்
வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்?...”
அ. “விரகிலர்” என்பதனால் குறிப்பிடப்படுவோர் யாவர்?
ஆ. இவ்வரிகளில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

viii. “கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப்பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக் கொள்ளுங்கள்....”
அ. இவ்வரி யாரால் கூறப்பட்டது?
ஆ. இவ்வரியில் வெளிப்படும் உணர்வு யாது?


kalvi.lk

ix. “வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”

அ. இவ்வரிகளை எழுதிய கவிஞர் யார்?
ஆ. உள்ளக்கமலம் என்பது எவ்வகை அணி?

x. “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”

அ. இக்கூற்றைக் கூறியவர் யார்?
ஆ. திருக்குறளை ஜேர்மன் மொழிபெயர்ப்பில் படித்தவர் யார்?

(2X10 = 20 புள்ளிகள்)

**02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

I. “கானாள உனைவிடுத்த கண்ணிலா
அருளிலி தன் காதல் மைந்தன்
தானாளும் தரணியெல்லாம் ஒருகுடைக்கீழ்
நீ ஆளத் தருவனின்றே
மேல்நாள்நம் உரிமை அறக்கவர்ந்த பெருந்
துணைவன் உனை வெறாத வண்ணம்
வானாள வானவர்கோன் பதம்மற்று
அவன் தனக்கே வழங்குவேனே”

அ. வீமனது கோபம் இவ்வரிகளில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
ஆ. திருதராட்டினன் மீது வெறுப்பு ஏற்படக் காரணம் யாது?

II. தம்மனைக்கோர் பசு வேண்டில் தாம்பலகாற் பார்த்திருந்தும்
பின்னும் துணிவிலராய்ப் பேதுறுதல் மாந்தர் குணம்
என்னே மணவினையேல் இமைப்பொழுதிலே முடிப்பார்
சின்னப்பதுமைகொடு சிறார்செய் மணம்போலுமரோ
தெரிவையவட் கிம்மாற்றம் சீர்க்கிளியே கூறுதியால்.

அ. இப்பாடலடி மூலம் கவிஞர் கூறமுற்பட்ட செய்தி யாது?
ஆ. திருமணத்தைப் பெரிய விடயமாக நோக்காமை எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

III. பங்கப்பழனத் துழுமுழவர் பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட்டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண்டெறியும் தமிழ்நாடா
கொங்கர்க் கமராபதியளித்த கோவே இராசகுலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப்பிறைக்கும் விழிவேலே!

அ. இப்பாடலில் சோழநாட்டின் வளம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
ஆ. சோழமன்னனின் வீரம் இப்பாடலில் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

IV. சினிமா கமிராவினால் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல. எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சிப்படிமத்திற்கும் ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படிச் சம்பந்தமில்லாத காட்சி வந்தால், அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகின்றது. சினிமா வாய்ப்பேச்சால், வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலிநாடாவிலோ வானொலியிலோ கேட்டுத் திருப்தியடைய முடியும்.

அ. சினிமா பல்சுவை நிகழ்ச்சியல்ல என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம் யாது?
ஆ. இப்பகுதியில் சினிமா மொழியின் முக்கியத்துவம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

V. ஒருநாள் ஒரே மூச்சில் எட்டுப் பக்கங்களை அடித்து முடித்திருந்தேன். வேண்டிய திருத்தங்களைக் கணிப்பொறியிலேயே செய்துகொண்டேன். எழுதி, அடித்து, அடித்து கைமுறியும் அவசியம் இப்போதெல்லாம் இல்லை. வேலையை முடித்து கைகளைத் தூக்கி, நாரியை நிமிர்த்திய போது மின்சாரம் நின்றுவிட்டது. அடித்த அவ்வளவும் பாழாகி என்னுடைய ஆர்வம் கசங்கிப் போனது. முதலிலிருந்து



kalvi.lk

திரும்பவும் இன்னொருமுறை அடிக்க வேண்டும்.
அ. கணிப்பொறியால் அடைந்த நன்மைகளாக அமைவன எவை?
ஆ. கணிப்பொறியில் ஏற்படக்கூடிய துன்பம் என்னவெனக் கூறப்பட்டுள்ளது?

(4X5 = 20 புள்ளிகள்)

**03. 'தத்தைவிடுதூது' என்னும் பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ. பாடப்பகுதியில் சுட்டிக் காட்டப்படும் பெண்ணடிமைத்தனம்
ஆ. பயன்படுத்தப்பட்ட அணிகளின் பொருத்தப்பாடு

**அல்லது**

**'குகப்படலம்' பாடப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ. பரதன் தன் தாயாரைக் குகனுக்கு அறிமுகப்படுத்திய விதம்.
ஆ. குகன் என்ற பாத்திரத்தின் குணப்பண்புகள்

**04. 'மூத்தம்மா' என்னும் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ. மூத்தம்மாவின் குண இயல்புகள்
ஆ. கிராமத்தில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள்
இ. கதையில் கூறப்படும் கிராமிய நம்பிக்கைகள்

**அல்லது**

**'இலட்சியமும் சமநோக்கும்' என்ற கட்டுரையை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.**

அ. இலட்சியவாதிகளின் இயல்பு
ஆ. இலட்சியங்களில் சமநோக்கம்
இ. இலட்சியவாதிகளில் யாராவது இருவரும் அவர்களது இலட்சியங்களும்

(15 புள்ளிகள்)

**05. 'நீதிப்பாடல்கள்' என்ற பாடப் பகுதியில்,**

அ. வாக்குண்டாம் பாடலில் அடக்கமுடையார் இயல்பும்
ஆ. நாலடியாரில் நன்றியுடையார் நட்பும்
வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

**06. 'பாரதியார் சுயசரிதை' என்ற பாடப் பகுதியில்,**

அ. தாம் விரும்பியதை அடையமாட்டாதவர்கள் யாவர் என்பதும் அவர்களது இயல்புகளும்
ஆ. கையாளப்பட்டுள்ள அணிகளின் பொருத்தப்பாடு
என்பன பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

**07. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரைப் பகுதியில்,**

அ. பிறிற்றோவின் நேர்மையற்ற தன்மை
ஆ. நாவலர் எழுந்ததும் நடந்ததுமான தோற்ற வர்ணனை
ஆகியவற்றை விபரிக்குக.

(10 புள்ளிகள்)



kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page